**Judicial Form No.53**
**(See Rule 42)**
DEPOSITION OF WITNESS
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
----
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, SATHANKULAM**
**DATE: 12.02.2024**

**Case No : CC 175 / 2016**

**Deposition of Witness : P.W. 1**

| | |
|---|---|
| **Name:** திரு. பில்லிகிரகாம் | **Caste:** |
| **Father / Husband Name:** டேனியல்ஆபிரகாம் | **Calling:** |
| **Village:** | **Religion:** |
| **Taluk:** | **Age:** |

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on 12.02.2024**

முதல் விசாரணை:

நான் நாசரேத்தில் குடியிருந்து கடந்த 1.12.2015 அன்று இந்தியன் ஓவர்சீஸ் வங்கி சாத்தான்குளம் கிளையில் துணை மேலாளராக பணியாற்றி பணிஓய்வு பெற்றுள்ளேன். புகார்தாரரை தெரியும். அவர் எங்கள் வங்கியில் மேனேஜராக பணியாற்றி வந்தார். கடந்த 17.7.2015 ம் தேதி அலுவலக செக்யூரிட்டி என்னிடம் சாவியை ஒப்படைத்து விட்டு சென்றார். நான் 18.7.2015 ம் தேதி அதிகாலை 1.15 மணியளவில் எங்கள் அலுவலகத்தில் பணியாற்றி வந்த வெங்கடேசன் என்பவர் எனக்கு போன் செய்து வங்கியில் திருட்டு நடந்திருப்பதாக தகவல் கூறினார். உடனே நான் அன்றே 2.30 மணியளவில் வங்கிக்கு சென்று பார்த்தேன். வங்கியில் திருடுவதற்கு பயன்படுத்தப்பட்ட வெல்டிங் மிஷின் பல பொருட்கள் இருந்தன. இதுசம்பந்தமாக நான் சிக்கந்தர் சாதிக் என்பவருக்கு தகவல் கொடுத்து அவர் காவல்நிலையத்தில் புகார் அளித்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை

வங்கியில் முழு நேரமும் காவலர் உண்டு என்றால் இல்லை. காவலர் பணிநேரம் காலை 8.30 முதல் வங்கி முடிவடையும் நேரம் ஆகும். வங்கி முடிந்த பின்பு காவலர் நான்குபுறமும் பரிசோதனை செய்துவிட்டுதான் சாவியை என்னிடம் ஒப்படைத்தார் என்றால் சரிதான். வங்கியை சுற்றி மற்ற 3 புறமும் கட்டிடங்கள் உள்ளது என்றால் சரிதான். வங்கியிலுள்ள கேமராக்கள் 24

மணிநேரமும் செயல்பாட்டில்தான் இருக்கும் என்றால் சரிதான். வங்கியின் கேமரா கட்டுப்பாடு யாரிடம் உள்ளது என்றால் புகார்தாரரின் அறையில் உள்ளது. மண்டல அலுவலகத்தில் அவ்வாறு கேமரா கட்டுப்பாட்டு அறை உள்ளது என்றால் தெரியாது. நான் பக்கத்தில் குடியிருக்கும் வங்கி பணியாளர் என்பதால் உடனடியாக வந்து பார்த்தேன் என்றால் சரிதான். வங்கியின் கதவு மற்றும் கேட்கள் உடைக்கப்படவில்லை என்றால் சரிதான். அதனால் வங்கியில் திருட முயற்சி நடக்கவில்லை என்றால் சரியல்ல. வங்கி பணியாளர் என்பதால் புகார்தாரருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in the open court to the presence of the Accused Read over to the witness and admitted by him to be correct.

(S/d)Tmt.C.Kalaiyarasi Reena
Judicial Magistrate,
Sathankulam.

**Judicial Form No.53**
**(See Rule 42)**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**----**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, SATHANKULAM**
**DATE: 12.02.2024**

**Case No : CC 175 / 2016**

**Deposition of Witness : P.W. 2**

| | |
|---|---|
| **Name:** வெங்கடேசன் | **Caste:** |
| **Father / Husband Name:** வெள்ளச்சாமி | **Calling:** |
| **Village:** | **Religion:** |
| **Taluk:** | **Age:** |

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on 12.02.2024**

<u>முதல் விசாரணை:</u>

நான் சாத்தான்குளத்தில் குடியிருந்து இந்தியன் ஓவர்சீஸ் வங்கி நாசரேத் கிளையில் அலுவலக உதவியாளராக பணியாற்றி வருகிறேன். வழக்கு சம்பவத்தின்போது சாத்தான்குளம் கிளையில் பணியாற்றி வந்தேன். புகார்தாரரை தெரியும். அவர் வங்கியில் மேலளாராக பணியாற்றி வந்தார். அ.சா.1 ஐ தெரியும். அவர் உதவி மேலாளராக பணியாற்றி வந்தார். கடந்த 18.7.2015 ம் தேதி அதிகாலை 3.00 மணியளவில் பேங்கிற்கு அருகில் உள்ள நபர்கள் வங்கியில் அலாரம் அடிப்பதாக கூறினார்கள். நான் உடனே வங்கியில் வந்து பார்த்தேன். அங்கு 2 சிலிண்டர்கள் ஒரு கட்டிங் பிளேடு இரண்டு ஹெல்மெட், சாக்குகள் மற்றும் வெல்டிங் கண்ணாடி ஆகியவை இருந்தன. நான் இதுசம்பந்தமாக சிக்கந்தர் சாதிக், பில்லிகிரகாம் மற்றும் செக்யூரிட்டி லட்சுமணன் ஆகியோருக்கு தகவல் கொடுத்தேன். இதுசம்பந்தமாக சிக்கந்தர் சாதிக் காவல்நிலையத்தில் புகார் அளித்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>குறுக்கு விசாரணை</u>

வங்கியில் பொருட்கள் எதுவும் உடைக்கப்படவில்லை என்றால் சரிதான். 3 ம் நபர் சொல்லித்தான் தெரியும் என்றால் சரிதான். மேலதிகாரிகள் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. முதல் விசாரணையில் உண்மைக்கு புறம்பாக சாட்சியமளித்துள்ளேன் என்றால் சரியல்ல.

Taken down by me in the open court to the presence of the

Accused Read over to the witness and admitted by him to be correct.

(S/d)Tmt.C.Kalaiyarasi Reena
Judicial Magistrate,
Sathankulam.

**Judicial Form No.53**
**(See Rule 42)**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**----**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, SATHANKULAM**
**DATE: 12.02.2024**

**Case No : CC 175 / 2016**

**Deposition of Witness : P.W. 3**

| | |
|---|---|
| **Name:** திரு.லட்சுமணன் | **Caste:** |
| **Father / Husband Name:** சுப்பையா | **Calling:** |
| **Village:** | **Religion:** |
| **Taluk:** | **Age:** |

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on 12.02.2024**

முதல் விசாரணை:

நான் முடிவைத்தானேந்தலில் குடியிருந்து சாத்தான்குளம் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி சாத்தான்குளம் கிளையில் செக்யூரிட்டியாக பணியாற்றி வருகிறேன். புகார்தாரரை தெரியும். அவர் வங்கியில் மேலளாராக பணியாற்றி வந்தார். அ.சா.1 ஐ தெரியும். அவர் உதவி மேலாளராக பணியாற்றி வந்தார். அ.சா.2 ஐ தெரியும். அவர் அலுவலக உதவியாளராக பணியாற்றி வந்தார். கடந்த 2015 ம் ஆண்டு ரம்ஜானுக்கு முந்தையநாள் 6.45 மணியளவில் நான் வங்கியை பூட்டி சாவியை உதவி மேலாளரிடம் கொடுத்தேன். 12.05 மணியளவில் அ.சா.2 வெங்கடேசன் போன் மூலம் எனக்கு வங்கியில் போலீசார் வந்திருப்பதாகவும் வங்கியில் வெல்டிங் மிசின், வெல்டிங் கண்ணாடி, கட்டிங் பிளேயர், கையுறை மற்றும் பொருட்கள் கிடப்பதாகவும் தகவல் சொன்னார். நான் உடனே வங்கிக்கு சென்று பார்த்தேன். அங்கு அந்த பொருட்கள் இருந்தன. இதுசம்பந்தமாக வங்கி மேலாளர் காவல்நிலையத்தில் புகார் அளித்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை

காலை 6.00 மணியளவில் வங்கிக்கு வந்தேன். அதற்கு முன்பு அங்கு என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது. மற்ற பணியாளர்கள் வங்கிக்கு எனக்கு முன்னால் எத்தனை மணிக்கு வந்தார்கள் என்றால் தெரியாது. மேலதிகாரிகள் கேட்டுக்கொண்டதன் பேரில் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. நேரடியாக தெரியாது என்றால் சரிதான்.

Taken down by me in the open

court to the presence of the Accused Read over to the witness and admitted by him to be correct.

(S/d)Tmt.C.Kalaiyarasi Reena
Judicial Magistrate,
Sathankulam.